
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1113

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

# கழகம் கண்ட சட்டப் போராட்டங்கள்

**தமிழ்.கா.அமுதரசன்**

44

கழகம் நடத்திய உயிர்ப்புமிக்க சட்டப் போராட்டங்களை உணர்வுபூர்வமாக விவரிக்கும் தொடர்!

அரசாணை எண் : 242 தேதி : 28.03.1989

‘மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கும், சீர் மரபினருக்கும் 20 சதவிகித தனி இட ஒதுக்கீடு’ செய்யப்படும் என்கிற, மாபெரும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அறிவிப்பினை வெளியிட்டது தமிழ்நாடு அரசு. வெளியிட்டவர் சமூகநீதிக் காவலர் முத்தமிழறிஞர் கலைஞர்.

இந்த புதிய ஆணையின் மூலம் பிற்படுத்தப் பட்டோருக்கு 30 சதவிகிதம், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் சீர்மரபினருக்கு 20 சதவிகிதம், பட்டியலினத்தவருக்கு 18 சதவிகிதம், பழங்குடி பிரிவினருக்கு 1 சதவிகி தம், பொதுத்தொகுப்பில் 31 சதவிகிதம் என்பதாகத் தமிழ்நாட்டின் இட ஒதுக்கீடு அமைந்தது.

“தமிழ்நாட்டில் நீண்டகாலமாக தீர்க்கப் படாமல் இருந்து வந்த ஒரு சமூகப் பிரச்சினை. பிற்படுத்தப்பட்டோர் மற்றும் தாழ்த்தப்பட்டோருக்கு கல்வி, வேலைவாய்ப்புகளில் தனித்தனி இடஒதுக்கீடு வழங்கப்பட்டது என்பது, திராவிட இயக்கத்தின் சமூகப் புரட்சிச் சாதனையாக இருந்த போதிலும், குறிப்பிட்ட சில சமூகத்தினர் தங்கள் சமூகத்தின் மிகப் பின்தங்கிய நிலையை எடுத்துரைத்து, தங்களை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் சமூகமாக அறிவித்து, அதற்கான தனி இடஒதுக்கீடு வழங்க வேண்டும் எனக் கோரி, தொடர்ந்து போராட்டங்களை நடத்தி வந்தனர்” என அந்த இட ஒதுக்கீட்டுக்கான காரண காரியங்களை, ‘நெஞ்சுக்கு நீதி’யில் விளக்கி இருக்கிறார் முத்தமிழறிஞர் கலைஞர்.

1950 களிலிருந்து தமிழ்நாட்டில் இட ஒதுக்கீட்டுக் கொள்கை நடைமுறையில் இருந்தாலும், பட்டியலினத்துக்கான ஒதுக்கீடு தவிர்த்து, மற்ற சமூகங்களுக்கான இட ஒதுக்கீடு பிற்படுத்தப்பட்ட (BACKWARD CLASSES - B.C) என்ற ஒரே பிரிவுக்குள் இருந்தது. கல்வியறிவு பெற்ற மற்றும் பொருளாதார முன்னேற்றம் அடைந்த பிற்படுத்தப்பட்ட சில சமூகங்கள் அரசு வேலைகள் மற்றும் உயர் கல்வி வாய்ப்புகளை அதிகமாகப் பெற்றனர். அதே நேரத்தில், கிராமப்புறங்களில் வாழ்ந்த பல தொழில்சார், நிலமற்ற மற்றும் கல்வி வசதியற்ற சமூகங்கள் இட ஒதுக்கீடு வழங்கிய வாய்ப்புகளைப் பயன்படுத்த முடியாத நிலையில் இருந்தனர்.

## வெளிப்படையாகத் தெரிந்த வேறுபாடுகள்

1970 - 80 களில் கழகம் ஆட்சிக்கு வந்த பின்னர், கல்வி வேலைவாய்ப்புகளில் ஒடுக்கப் பட்ட சமூகங்களுக்கு அளித்த முன்னுரிமையின் போது, சில சமூகங்கள் அந்த வாய்ப்புகளைப் பெற முடியாத நிலை உருவானபோது, இந்த வேறுபாடு வெளிப்படை யாகத் தெரிந்தது.

குறிப்பாக, கிராமப்புற மாணவர்கள், தொழிலாளர் சமூகங்கள், மற்றும் புறக்கணிக்கப் பட்ட பழங்குடி சார்ந்த சமூகங்கள் “பி.சி. (BC) -க்குள் உள்ள மிகவும் பின்தங்கியவர்களுக்குத் தனி ஒதுக்கீடு”வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தனர். இந்தக் கோரிக்கை, சமூகநீதியின் இரண்டாம் கட்ட அரசியல் விவாதமாக இருந்தது.

1980 களில் இதற்காக தொடங்கப்பட்ட போராட்டங்கள், 1987-இல் உச்சமாக இருந்தன. 1989-ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த நம் தலைவர் கலைஞர், பி.சி (BC ) ஒதுக்கீட்டு அமைப்பை மறுசீரமைத்தார். இதன் மூலம் BC பிரிவு இரண்டு அடுக்குகளாக பிரிக்கப் பட்டன.




ஓவியம் : ரவி பேலட்

மருத்துவக் கல்வி அனைத்திந்தியத் தொகுப்பில், 27 சதவிகிதம் ஓ.பி.சி. இட ஒதுக்கீடு வென்றது தொடர்பாக கடந்த வாரத்தில் எழுதியவை, ‘மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் எழுதிய “மருத்துவக் கல்வியில் சமூகநீதி 27% ஓ.பி.சி. இட ஒதுக்கீட்டின் சட்டப் போராட்ட வரலாறு”என்கிற நூலிலிருந்து குறிப்புகள், நூல் ஆசிரியரின் அனுமதியுடன் எடுக்கப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது. மிக விரிவாக, ஆவணங்களுடன் தயாராகியுள்ள அந்த நூல், கழகத்தின் சட்டப் போராட்டத்துக்கு ஒரு சான்றாவணமாகத் திகழும்.

BACKWARD CLASSES (BC) - 30%
MOST BACKWARD CLASSES + DENOTIFIED COMMUNITIES - 20%
SCHEDULED CASTES - 18%
SCHEDULED TRIBES - 1%

என்கிற வகையில் தமிழ்நாட்டின் இட ஒதுக்கீட்டு வரம்பைச் சீர் செய்து மாபெரும் மாற்றத்துக்கு வழிவகுத்தார்.

“அழுத்தப்பட்டுக் கிடக்கும் சமூகங்களில் இருந்து ஒரிருவருக்கு மட்டும் பதவி வாய்ப்புகள் வழங்கப்படுவது, அதை வழங்கிய நமக்கே ஓரளவு ஆறுதலாக இருக்கலாம். ஆனால், அதைவிட, அந்த மொத்த சமூக மக்களும் முன்னேற்றம் பெற்று பயனடையக் கூடிய வாய்ப்புகள், வசதிகள் மற்றும் உரிமைகள் அவர்களுக்கு அமைவதுதான் முழுமையான மறுமலர்ச்சியாகும் என்ற உயரிய எண்ணத் துடன்தான் தி.மு.க அரசு திட்டங்களைத் தீட்டி, சட்டங்களை இயற்றியது” என்று அந்தச் சட்டத்தின்போது குறிப்பிட்டார் கலைஞர்.

“படரக் கொழுகொம் பின்றித் தவித்துக் கொண்டிருந்த பச்சைக் கொடியை வலிமையான மரமொன்றில் ஏற்றி, அதன் கிளைகள் அனைத் திலும் படர விட்டது போன்ற பூரிப்பை, மிகவும் பின்தங்கிய சமூகத்தைச் சேர்ந்த இளைஞர்கள் தங்கள் புன்னகையின் மூலம் வெளிப்படுத்தினர்” என்று, அந்த இடஒதுக்கீடு வழங்கப்பட்ட நாட்களின் சமூக உணர்வை விளக்கு கிறார்.

இடஒதுக்கீடு என்பது வெறும் நிர்வாகச் செயல் அல்ல; சமூக மாற்றத்தை நோக்கிய அரசியல் வெளிப்பாடு என்பதில், உறுதியாக இருந்தார் கலைஞர். அந்தச் சட்டம் இன்று நிலைத்து நிற்ப தற்கு, கலைஞர் கொண்ட உறுதியே காரணமாக இருந்தது.

## அதிகரித்த கல்வி வேலைவாய்ப்பு

இந்த 20% ஒதுக்கீடு நடைமுறைக்கு வந்த பின், மொத்த ஒதுக்கீடு 50% வரம்பை மீறுகிறது என்ற காரணத்தால், சட்ட சவால்கள் எழுந் தன. இந்திய அளவில் இடஒதுக்கீடு விவாதத்தை மாற்றிய தீர்ப்புகள் வந்த சூழலில், தமிழ்நாடு தன் ஒதுக்கீட்டு அமைப்பைப் பாதுகாக்க தனிச் சட்டம் இயற்றி, அதை அரசியலமைப்பின் ஒன்பதாவது அட்டவணையில் சேர்க்க நடவடிக்கை எடுத்தது. இதன் மூலம் நீதிமன்றத் தலையீட்டி லிருந்தும் பாதுகாப்பு கிடைத்தது.

1989 ஆம் ஆண்டு கலைஞர் அளித்த 20 சதவிகித மிக பிற்படுத்தப்பட்டவர்களுக்கு இட ஒதுக்கீட்டுக்குப் பின்னர், கிராமப்புற அரசுப் பள்ளி மாணவர்களின் கல்லூரிச் சேர்க்கை விகிதம் கணிசமாக உயர்ந்தது.

எம்.பி.சி (MBC) பிரிவில் முதல் தலைமுறைப் பட்டதாரிகள் எண்ணிக்கை அதிகரித்தது, அரசு வேலைகளில் பின்தங்கிய சமூகங்களின் பிரதிநிதித்துவம் உயர்ந்தது. உள்ளாட்சி அமைப்புகளில் சமூக பங்களிப்பு அதிகரித்தது.

அப்போதைய பல ஆய்வுகளும் சரி, அதற்குப் பின்னரான பல ஆய்வுகளும் எம்.பி.சி (MBC) ஒதுக்கீடு இல்லாமல், பி.சி. (BC பிரிவுக்குள் அனைத்து சமூகங்களின் இட ஒதுக்கீடும் தொடர்ந்திருந்தால், சமச்சீரான வாய்ப்புக்கான பிரச்சினை தொடர்ந்திருக்கும் என்றன. குறிப்பாக, இந்த 20% ஒதுக்கீடு தமிழ்நாட்டின் சமூகநீதி அரசியலை, அடுத்த கட்டத்துக்கு நகர்த்தின. அதாவது, சமூகநீதி என்பது சதவிகித உயர்வு மட்டுமல்ல; அந்த சதவிகிதம் யாரைச் சென்றடைகிறது என்பது முக்கியம் என்ற புரிதலை உருவாக்கியது. குறிப்பாக, கல்வி, வேலைவாய்ப்பு, மற்றும் அரசியல் பிரதிநிதித்துவத்தில் இந்த மாற்றம் உருவாக்கிய தாக்கம், இன்று வரை தமிழ்நாட்டின் சமூக வளர்ச்சியில் காணப்படுகிறது.

> **இன்றுவரை தமிழ்நாட்டின் இட ஒதுக்கீட்டுக் கொள்கை கொண்டிருக்கும் உறுதிக்கு, கலைஞர் அளித்த சமூக நீதி அடித்தளமே காரணமாக உள்ளது.**

அந்த இடஒதுக்கீட்டை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளில், தமிழ்நாடு அரசின் சர்பின் நீதிமன்றத்தில் வலுவான பதில் அளிக்கப்பட்டன. உரிய சட்டப் பாதுகாப்புக்கான வழிவகைகளை உருவாக்கினார் கலைஞர். இன்றுவரை தமிழ்நாட்டின் இட ஒதுக்கீட்டுக் கொள்கை கொண்டிருக்கும் உறுதிக்கு, கலைஞர் அளித்த சமூக நீதி அடித்தளமே காரணமாக உள்ளது.

**...தொடரும்**

## இலங்கை அகதிகள் முகாமின் குரல்!




‘தமிழ்நாட்டில் வாழும் இலங்கைத் தமிழர்களின் குடியுரிமைச் சிக்கல்களுக்குத் தீர்வு காண்க’ என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பிரதமர் மோடிக்கு கடிதம் வழியாக சமீபத்தில் வலியுறுத்தி உள்ளார். குறிப்பாக அவரது கடிதத்தில், ‘09.01.2015 வரை இந்தியாவில் வசித்து வரும் இலங்கைத் தமிழர்களைச் சட்டவிரோதமாகக் குடியேறியவர்கள் என்று கருதக் கூடாது என்ற விளக்கத்தை அதிகாரபூர்வமாக அறிவிக்க வேண்டும்’ என வலியுறுத்தி இருக்கிறார். இந்தச் சூழ்நிலையில், இலங்கை அகதிகளின் எதிர்காலம்? என்கிற கேள்வியுடன் கவனம் பெறுகிறது, பாரதி புத்தகாலயம் வெளியிட்ட இந்த நூல்.

இனக்கலவரம் மற்றும் உள்நாட்டுப் போர் காரணமாக இந்தியாவில் தஞ்சம் அடைந்தவர்கள், இந்தியா - இலங்கை உடன்படிக்கையின்படி இந்தியாவில் மீள் குடியமர்த்தப்பட்ட இந்திய வம்சாவளி தமிழர்கள் என உயிருக்குப் பாதுகாப்பு தேடி வந்தவர்கள், தமிழ்நாட்டில் பல மாவட்டங்களில் அகதி முகாம்களில் வசித்து வருகின்றனர். தற்காலிக முகாம் நிரந்தர முகாம் ஆகிவிடுமோ என்கிற அச்சத்தில் 40 ஆண்டுகளுக்கும் மேலாகக் குடியுரிமை அற்றவர்களாக வாழ்ந்துவருவதை இந்த நூல் கவனப்படுத்துகிறது. இலங்கை மலையக மண்ணில் பிறந்து, இன்று அகதியாக இந்தியாவில் வசிக்கும், இலங்கைப் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் உதவி விரிவுரையாளராகப் பணியாற்றிய எஸ்.இஸட்.ஜெயசிங் எழுதியுள்ள இந்த நூல், இலங்கை அகதி மக்களுக்கு விடுதலை வேண்டும். அதற்கு ஒரே தீர்வு, இந்திய குடியுரிமை அளிப்பது என்பதை வலியுறுத்துகிறது.

இலங்கை அகதிகள் முகாமை, தமிழ்நாடு அரசு பரிவுடன் கவனித்து வருவதையும் குறிப்பிடுகிறது நூல். அதே நேரத்தில், கல்வி வேலைவாய்ப்புகளில் உள்ள சட்ட சிக்கல்களையும் அலசுகிறது. நூலாசிரியர் கவனப்படுத்துவதையே முதலமைச்சர் தனது கடிதங்கள் வழி ஒன்றிய அரசுக்கு அழுத்தம் தருகிறார். நூலின் விலை ரூ.70. நூலைப் பெற 94445-67935 எண்ணுக்கு அழைக்கலாம்.

## ஃப்ளாஷ்பேக்



## தலைவர் அளித்த வாழ்த்து!



கா.லோகநாதன்

2012-ஆம் ஆண்டு, அன்றைய கழகப் பொருளாளர், இன்றைய கழகத் தலைவர் அவர்கள், கழக நிகழ்ச்சிகளுக்காக நாகப்பட்டினம் மாவட்டத்துக்கு வருகை தந்தார். நாகையில் தங்கியிருந்த இடத்தில் கழக நிர்வாகிகளைச் சந்தித்தவேளை, வேதாரண்யம் ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் என என்னை அறிமுகப்படுத்திக் கொண்டு, தலைவருக்குப் பொன்னாடை அணிவித்து வரவேற்பு அளித்தேன். தலைவர் மகிழ்ச்சியுடன் கைகுலுக்கி, அவரும் எனக்கு ஒரு பொன்னாடை அளித்து வாழ்த்துத் தெரிவித்தார். அந்த ஒரு பாராட்டு, வாழ்நாள் கழகப் பணி செய்ய போதுமான ஊக்கம் அளித்தது.

**- கா.லோகநாதன், மு.இளைஞர் அணி ஒன்றிய அமைப்பாளர், வேதாரண்யம் சட்டமன்றத் தொகுதி, நாகப்பட்டினம் மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## நல்வருக

### நாட்டுப்பற்றும் மொழிப்பற்றும்..!

1979-ஆம் ஆண்டு, ஜனவரி 19-ஆம் தேதி, சென்னை வந்த பிரதமர் மொரார்ஜி தேசாய் ‘நாட்டுப்பற்று உள்ளவர்கள் இந்தியைப் படித்தே தீர வேண்டும்’ என வலியுறுத்தினார். அதேநாளில், திருச்சி முத்தமிழ் மன்ற விழாவில், உரையாற்றி னார் கலைஞர், ‘‘நாட்டுப்பற்றைக் காட்டி மொழிப்பற்றை அழித்திட யார் முயன்றாலும், அதை ஏற்றுக்கொள்ள தமிழ்நாடு தயாராக இல்லை. நாட்டுப்பற்று இருப்பதால்தான், எங்க ளுடைய தமிழை இழக்கச் சம்மதிக்கிறோம் என்று சொல்கிற ஈனபுத்தி தமிழர்களுக்கு ஏற்படக்கூடாது’’ என வலியுறுத்தினார்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131